# DIOCESAN CIRCULAR LETTERS

No.C.02/2025 29.01.2025

## பாலர்சபை ஞாயிறு - 09.02.2025

அன்புச் சிறார்களே! சிறார் வாழ்வில் நம்பிக்கையை வளர்த்தெடுக்கின்ற பெற்றோர்களே, அருள்பணியாளர்களே, அருள்சகோதரிகளே, வழிகாட்டிகளே, சகோதர சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் பாலர்சபைநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்!

ஒவ்வோர் ஆண்டும் அகிலஉலகத் திருஅவையானது பிப்ரவரி இரண்டாம் ஞாயிறை பாலர்சபை நாளாகக் கொண்டாடுகின்றது. இந்த யூபிலி ஆண்டில் “நம்பிக்கையின் துளிகளாய் நம் சிறார்கள்” என்னும் மையப்பொருளில் 09.02.2025 ஞாயிறை பாலர்சபை நாளாகக் கொண்டாடுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

“குழந்தைகளிடம் இருந்து கற்றுக்கொள்வோம்” என்ற நிகழ்வில் மார்ச் 2, 2024 அன்று கலந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் “குழந்தைகள்தான் பெற்றோருக்கும் குடும்பத்திற்கும் மகிழ்வின் காரணியாக திகழ்கிறார்கள். குழந்தைகள் நம்முடைய கைகளில் தரப்பட்டுள்ள விலைமதிப்பற்ற செல்வங்கள். அவர்களை கிறிஸ்துவில் நம்பிக்கைக்குரியவர்களாக வளர்த்தெடுக்க வேண்டியது நம் கடமையாக இருக்கிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.

திருமுழுக்கு என்ற அருளடையாளம் வழியாக நம்பிக்கை என்னும் அருள்கொடையை சிறுவயதிலேயே பெறும் குழந்தைகளை நம்பிக்கையில் தொடர்ந்து தழைத்தோங்கச் செய்வது பெற்றோர், வழிகாட்டிகள், ஆசிரியர்கள், உற்றார் உறவினர் ஆகியோரின் பொறுப்பாக உள்ளது. “சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள்” (மத் 19:14) என்று சொல்லி எத்தகையத் தடைகளையும் தாண்டி இறையன்பை சிறாருக்கு வழங்கிய இயேசுவின் பெயரால் சிறாரைப் பாதுகாக்கவும் அவர்களை நல்ல மனிதர்களாக வளர்த்தெடுக்கவும் நம் அனைவருக்கும் கடமை இருக்கிறது. அதிலும் குறிப்பாக “எதிர்நோக்கு ஏமாற்றம் தராது” என்னும் யூபிலி மடலில் ‘பொறுப்பானப் பெற்றோராக இருத்தல் ஒவ்வொரு ஆணிலும், பெண்ணிலும் படைத்தவரே தோற்றுவித்தத் திட்டமாகும்’ என குழந்தை வளர்ப்பில் பெற்றோர் காட்ட வேண்டிய அக்கறைக் குறித்து எண் 9–ல் திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகிறார்.

மாறிவரும் காலச்சூழல்களில் சிறாரின் பாதுகாப்பு பெரும் கேள்விக்குறியாக மாறியிருக்கிறது. சிறார் மீதான வன்முறைச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கல்விமுறையினால் உருவாகும் மனஅழுத்தம், ஊடகத் தாக்கம், பள்ளிப்பருவத்திலேயே போதைப் பழக்கங்களுக்கு ஆளாதல் என சிறாரின் வாழ்வுச் சூழல் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளது. சமீபத்திய கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் மட்டும் 243 சிறார் கூர்நோக்கு இல்லங்கள் இருக்கிறது. இச்சூழலில் நாம் சிறார் மீதான அக்கறையையும் அவர்கள் நலன் சார்ந்த முன்னெடுப்புகளையும் அதிகப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

எத்தகையச் சூழலிலும் நம்பிக்கையை குழந்தைகளுக்கு திருஅவையால் கொடுக்க முடியும். எனவே நம்பிக்கையாளர்களின் குழுமமாகிய நாம் அலைபேசி, ஊடகம், போதை போன்றவற்றில் அடிமையான சிறாரை இனங்கண்டு தீயபழக்கவழக்கங்களில் இருந்து அவர்களை விடுவிக்க என்ன செய்ய இருக்கின்றோம் என்பதை சிந்திக்க வேண்டும். துரித உணவு, தூக்கமின்மை, கல்வி முறையின் பாதிப்பு ஆகியவற்றால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகும் சிறாருக்கும் பெற்றோருக்கும் இவை குறித்த போதிய விழிப்புணர்வு தேவை.

நமது கோட்டாறு திருஅவையானது சிறார் உருவாக்கத்தில் மிகுந்த அக்கறைக் கொண்டுள்ளது. பாலர் சபை, சிறார் இயக்கம் ஆகியவற்றின் வழியாக சிறார்களை ஒருங்கிணைத்து அவர்களை சமூக அக்கறை உள்ளவர்களாக வளர்த்தெடுப்பதில் நாம் முனைப்புக் காட்டுகின்றோம். சிறார் வழிகாட்டிகளும் பொறுப்புணர்வோடு தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சிறார்களை இறைநம்பிக்கையிலும் திறமைகளிலும் வளர்த்தெடுப்பதைக் கண்டு அவர்களின் தன்னலமற்றப் பணிகளை இந்நேரத்தில் பாராட்டுகின்றேன்.

## யூபிலி ஆண்டில் சிறாரின் நலனுக்காக நாம் முன்னெடுக்க வேண்டிய சில செயல்பாடுகள்

- ❖ பெற்றோர் தங்கள் அலுவல்கள் மத்தியிலும் தங்கள் பிள்ளைகளோடு மனம்திறந்து உரையாடி அவர்களோடு நேரம் செலவழிக்க வேண்டும்.
- ❖ துரித உணவு பழக்கங்களைக் சிறாரிடம் குறைத்து ஆரோக்கியமான உணவு முறைகளை அவர்களிடம் வளர்த்தெடுக்க வேண்டும்.

- ❖ சிறார் உருவாக்கத்தை மையப்படுத்தும் பாலர் சபை, சிறார் இயக்கங்களில் தங்கள் பிள்ளைகள் கலந்துகொள்வதைப் பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும்.
- ❖ மூத்தோர், ஆதரவற்றோர் இல்லங்களை சந்திக்கச் செய்து பிறரன்புப் பணிகளை முன்னெடுக்க சிறாரை ஒருங்கிணைக்க வேண்டும்.
- ❖ வகுப்பறைக் கல்வி, தேர்வு, மாலைநேர சிறப்பு வகுப்புகள் ஆகியவற்றைக் கடந்து விளையாட்டு, கலை போன்றவற்றில் சிறாரிடம் ஆர்வத்தை வளர்த்து அவர்களின் திறமைகளைக் கண்டறியும் நிகழ்வுகளை நடத்த வேண்டும்.

யோவான் நற்செய்தியின் 6ஆம் அதிகாரத்தில் நாம் வாசிப்பதுபோல் தன்னிடம் இருந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் வழங்கி நம்பிக்கையின் மாபெரும் அடையாளமாய் விளங்கிய சிறுவனைப் போல் நமது சிறார்களும் நம்பிக்கையின் அடையாளங்களாக விளங்க அவர்களுக்கு நாம் அனைவரும் உறுதுணையாய் இருக்க முயற்சி செய்வோம். மாறிவருகின்ற காலச்சூழலில் நமது சிறாரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களின் திறமைகளை எல்லா தளங்களிலும் வளர்த்தெடுத்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவர்களாக அவர்கள் வளரத் துணைநிற்போம்.

உலகமெங்கும் சிறாருக்கானப் பணிகளை அகில உலகத் திருஅவை முன்னெடுக்க நமது தோழமையின் அடையாளமாக பாலர்சபை நாளில் சிறப்புக் காணிக்கை பிரித்து மறைமாவட்டப் பொருளரிடம் ஒப்படைக்க வேண்டுகின்றேன்.

இறையாசீர் உங்கள் அனைவரோடும் தங்குவதாக!

கிறிஸ்துவின் மனநிலையில்
Sd/-
\+ ஆயர் **நசரேன் சூசை**
கோட்டாறு மறைமாவட்டம்

---

**குறிப்பு :** இச்சுற்றுமடல் 02.02.2025 ஞாயிறு அன்று நம் மறைமாவட்டத்தின் எல்லா ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் வாசிக்கப்பட வேண்டும்.